(2) தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு மாறாக மானியக் கோரிக்கை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் ; தகவல் அவர்களே, நான் எற்கெனவே தெரிவித்தபடி, 9-ம் தேதி அன்று எடுக்கப்பட்ட மானியக் கோரிக்கை இன்று முடிவு அடைந்து இருக்கிறது. ஏற்கெனவே 6-4-79-ம் தேதி அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழுவில் நாம் எடுத்த முடிவுப்படி இன்று எச்—ஆர், ஆண்டு சி. இ. எடுக்கவேண்டும். அதற்கு பதிலாக தாங்கள் இன்றையதினம் எங்களுக்கு அனுப்பி இருக்கின்ற நிகழ்ச்சி நிரலில், மோட்டார் வண்டிகள் போன்ற மானியக் கோரிக்கை எடுத்துக்கொள்வது என்று இன்று அறிவித்து இருக்கிறீர்கள். இந்த முடிவை யார் எடுத்தார்கள். ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு இந்த மாமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு இந்த மாமன்றம் அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. ஆக, மாமன்றம் எடுத்த முடிவுக்கு மாறாக இங்கே எங்களுக்கு நிகழ்ச்சி நிரல் அடிக்கப்பட்டு, இன்றைக்கு நிகழ்ச்சிகள் நடத்த இருக்கிறீர்கள். இது முறைகேடானது அல்லவா? . . . . (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 6-4-79 அன்று அலுவல் ஆய்வுக்குழுவில் ஏற்கெனவே என்ன முடிவு செய்து இருந்தார்களோ அந்த முறைப்படி தான் நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டு வருகிறோம். அந்த வகையில் தான் இன்றைக்கு இதை எடுத்துக்கொள்கிறோம். ஆனால் இந்த மானியக்கோரிக்கைக்கு முன்பாக ஒரு மானியக்கோரிக்கை விடுபட்டு இருக்கிறது. ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் உறுப்பினர்கள் அதிகமான அளவில் பேசவேண்டும் என்று விரும்புகிற காரணத்தால், சில மானியக் கோரிக்கைகள் ஒரு நாள் தள்ளி அடுத்த நாளைக்கு எடுத்துக் கொள்ளவேண்டி வந்துவிடுகிறது. இன்றைக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் இல்லாத காரணத்தால், அவர் வெளியூர் சென்றுள்ள காரணத்தால், அது எடுக்கப்படவில்லை. இடையில் விடப்பட்ட மானியக்கோரிக்கை அமைச்சர் வந்த பின்னர் எடுக்கப்படும். அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவிற்கு மாறாக நடைபெற வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இடையில் விடப்பட்டு இருப்பது பின்னாலே எடுத்துக்கொள்ளப்படும். எனவே, அலுவல் ஆய்வுக்குழுவிற்கு மாறாகவோ, வேறுபாடாகவோ இங்கே நடக்கவில்லை என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 16]

•

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, போக்குவரத்து, சாலைகள், பாலங்கள் என்கிற மானியங்கள் இந்தச் சபையில் வந்துள்ளன. அவற்றின் மீது விரிவாகப் பேசவேண்டும். இப்போது மணி 12—10. இன்றைக்கு விவாதம் முடிப்பது என்பது சாத்தியம் அல்ல. நாளை காலையும் தொடர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கும் முடிவுப்படி நாம் நிகழ்ச்சிகளை நடத்தாமல், ஒத்திப்போட்டுக்கொண்டு போவதற்கு இதுவும் ஒரு காரணம். முடிவு எடுத்ததற்கும் மேலாக பல உறுப்பினர்கள் பேச விரும்புவதால் இது நடைபெறுகிறது. ஏதோ முடிந்த வரையில் இன்று நடத்துவோம். இல்லாவிட்டால் நாளை தொடரும். அவ்வளவுதான்.

[பிற்பகல் 12-10]

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இப்பொழுது சொன்ன கருத்துக்களை, ஒருவேளை அது இங்கே நடைபெற்றுக்கொண்டு இருக்கிற நிகழ்ச்சி என்றாலும் கூட. இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் 3 நாட்கள் எடுத்து இருக்கிறீர்கள். பிரதான எதிர்க்கட்சி கூட இங்கே இல்லை. இருந்தாலும் கூட இந்த மானியக் கோரிக்கையை நாம் 3 நாட்களாக வாதித்துக் கொண்டிருக்கிறோம். இதை விட இன்னும் முக்கியமான மானியக் கோரிக்கைகள் இங்கே வர இருக்கின்றன. இருப்பினும் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே இருக்கிற உறுப்பினர்கள் யாரும் பேசாமல் இல்லை. அந்தந்தக் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொண்டதற்கிணங்க நேரத்தைக் கூட்டிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். உறுப்பினர்கள் வேண்டுகோளுக்கிணங்கத்தான் இந்த மானியக் கோரிக்கை இன்றும் நடைபெறுகிறது. நான் வேண்டுமென்று நடத்தவில்லை அல்லது அமைச்சர்கள் சொல்லி நடத்தவில்லை. இனிமேல் வருகிற மானியங்களில் உறுப்பினர்கள் பேசுவதை குறைத்துக் கொண்டால் எனக்கு ஒன்றும் இல்லை. எனக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும், உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்,